# சுகன்யா சம்ரித்தி யோஜனாவின்கீழ் சிறந்த அஞ்சல் வட்டமாக திகழும் தமிழகம்: தலைமை அஞ்சல் துறை தலைவர் பெருமிதம்




**சென்னை:** சுகன்யா சம்ரித்தி யோஜனாவின் கீழ், நாட்டிலேயே புதிய கணக்கு தொடங்கியதில் சிறந்த அஞ்சல் வட்டங்களில் ஒன்றாகத் தமிழகம் திகழ்கிறது என்று தமிழக வட்ட தலைமை அஞ்சல் துறைத் தலைவர் ஜெ.சாருகேசி தெரிவித்தார்.

அஞ்சல் துறையின் சென்னைநகர மண்டலத்தில் ஒவ்வோர் ஆண்டும் பல்வேறு பிரிவுகளின் கீழ் சிறப்பாகச் செயல்படும் ஊழியர்களின் செயல்திறனை அங்கீகரிக்கும் வகையில், மண்டல மேன்மை விருது வழங்கப்படுகிறது. அந்த வகையில், 2022-23-ம் ஆண்டில் மண்டல மேன்மை விருது வழங்கும் விழா சென்னையில் நேற்று நடைபெற்றது.

விழாவில், தலைமை விருந்தினராக, தமிழக வட்ட தலைமை அஞ்சல் துறைத் தலைவர் ஜெ.சாருகேசி கலந்து கொண்டார். அஞ்சல் துறையில் பல்வேறு பிரிவுகளில் சிறப்பாக பணியாற்றிய ஊழியர்களுக்கு விருதுகளை வழங்கி, அவர் பேசியதாவது:

**சாதனை இலக்கை...** தமிழக அஞ்சல் துறை கடந்த நிதியாண்டில் மிகச் சிறப்பாக செயல்பட்டுள்ளது. ஊழியர்களின் சிறந்த செயல்பாட்டால், 100 சதவீதத்துக்கு மேல் சாதனை இலக்கை எட்டியுள்ளோம். வழக்கமாக, நகர

மண்டலத்தில் உள்ள அஞ்சல் அலுவலகத்தில் சிறு சேமிப்பு பெரிய அளவில் இருக்காது.

ஆனால், கடந்த நிதியாண்டில் சிறுசேமிப்பு பிரிவில் சென்னை நகர மண்டலம் பெரிய அளவில் சாதனை படைத்துள்ளது. 2022-23-ம்நிதியாண்டில் சென்னை நகர மண்டலம் அஞ்சலக சிறுசேமிப்பு பிரிவின்கீழ், ரூ.127 கோடி வருமானம் ஈட்டியுள்ளது.

வணிகத் துறையில் ரூ.101.53 கோடி, வணிகம் அல்லாத துறையில் ரூ.135.89 கோடி வருவாய் ஈட்டியுள்ளது. 2023-ம் ஆண்டு மார்ச் வரை, அஞ்சல் அலுவலக சேமிப்பு வங்கியின் கீழ் 59 லட்சம் நேரடிக் கணக்குகள் இருக்கின்றன.

சுகன்யா சம்ரித்தி யோஜனாவின் கீழ் 2022-23-ம் ஆண்டுக்கான புதிய கணக்குகளைத் தொடங்குவதில் நாட்டிலேயே சிறந்துவிளங்கும் அஞ்சல் துறை வட்டங்களில் தமிழகம் ஒன்றாகும். இவ்வாறு அவர் பேசினார்.

## கூவம், அடையாறு கரையோரங்களில் குப்பை கொட்டுவதை தடுக்க 150 இடங்களில் கண்காணிப்பு கேமரா நிறுவ திட்டம்: ஜெ.ராதாகிருஷ்ணன் தகவல்



**சென்னை:** சென்னை மாநகரில் கூவம், அடையாறு கரையோரங்களில் குப்பை கொட்டுவதைத் தடுக்க150-க்கும் மேற்பட்ட இடங்களில் கண்காணிப்புக்

கேமராக்களை நிறுவத் திட்டமிட்டிருப்பதாக மாநகராட்சி ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

சென்னை மாநகரப் பகுதியில் கூவம், அடையாறு, கொசஸ்தலை ஆறு மற்றும் பக்கிங்ஹாம் கால்வாய் ஆகியவை உள்ளன. மழைக்காலங்களில் தண்ணீரை வடியச் செய்வதில் இந்த நீர்வழித் தடங்களின் பங்கு அதிகம்.இந்நிலையில், இந்த ஆறுகள் ஆக்கிரமிப்புகளில் சிக்கி, குப்பை மற்றும் கட்டுமானக் கழிவுகளைக் கொட்டுமிடமாக மாறியுள்ளன. ஆறுகளின் அகலமும் குறைந்துவிட்டது.

எனவே, ஆறுகளைப் பாதுகாக்க `சென்னை ஆறுகள் சீரமைப்பு அறக்கட்டளை' உருவாக்கப்பட்டது. கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக ரூ.2 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கப்பட்டு, சுற்றுச்சூழல் மீட்டெடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

குறிப்பாக, கூவம், அடையாறு ஆகியவற்றின் கரையோரப் பகுதிகளை ஆக்கிரமித்திருந்த 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடியிருப்புகள் அகற்றப்பட்டு, அவற்றில் வசித்து வந்த குடும்பங்களுக்கு, மாநகர் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

அடுத்தகட்டமாக, ஆறுகளின் கரைகள் பலப்படுத்தப்பட்டு, அப்பகுதிகளில் கொட்டப்பட்டிருந்த குப்பை, கட்டுமானக் கழிவுகள் அகற்றப்பட்டன. மேலும், தொடர்ந்து குப்பை கொட்டாத வகையில் சுவர்கள் எழுப்பப்பட்டு, கம்பி வேலிகள் அமைக்கப்பட்டன.

**பசுமைத் தீர்ப்பாயம்:** எனினும், கூவம் ஆற்றின் கரையோரம் புதுப்பேட்டை, மின்வாரிய தலைமை அலுவலகம் பின்புறம், சிந்தாதிரிப்பேட்டை போன்ற பகுதிகளிலும், அடையாற்றின் கரையோரத்தில் சில இடங்களில் கதவுகளை உடைத்தும் சிலர் குப்பை, கட்டுமானக் கழிவுகளைக் கொட்டி வருகின்றனர்.

இது தொடர்பான வழக்குகள் பசுமைத் தீர்ப்பாயத்தில் விசாரிக்கப்பட்டு வந்தன. தமிழகம் முழுவதும் திடக்கிழிவு மேலாண்மை விதிமீறல் தொடர்பான விவகாரத்தில் தலைமைச் செயலர் தலையிட்டு, உரிய தீர்வுகாண வேண்டும் என்றும், குப்பை கொட்டுமிடங்களில் சிசிடிவி கேமராக்களை நிறுவ வேண்டும் என்றும் தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், சென்னை மாநகராட்சி ஆணையராக புதிதாகப்பொறுப்பேற்றுள்ள ஜெ.ராதாகிருஷ்ணன், பல்வேறு பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டு வருகிறார். சில தினங்களுக்கு முன்பு கூவம், அடையாறு கரையோரங்களில் குப்பை கொட்டப்படுவது தொடர்பாக அவர் ஆய்வு மேற்கொண்டார்.

ஆற்றங்கரைகளில் குப்பை கொட்டுவதைத் தடுப்பது தொடர்பாக, தலைமைச் செயலர் தலைமையில் ஆலோசனைக் கூட்டமும் நடத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மாநகராட்சி ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன் கூறும்போது, “நீர்வழித் தடங்களைத் தூய்மையாகப் பராமரித்து,அப்பகுதியின் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க பல கோடி செலவிடப்பட்டுள்ளது. எனினும், ஆற்றங்கரையில் சிலர் குப்பை கொட்டி,நீர்நிலையையும், சுற்றுச்சூழலையும் மாசுபடுத்துவதை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இத்தகைய விதிமீறலில் ஈடுபடுவோரைக் கண்டறிய, 150-க்கும் மேற்பட்ட இடங்களில் கண்காணிப்புக் கேமராக்களை நிறுவத் திட்டமிட்டுள்ளோம்.

மேலும், தேவையான இடங்களிலும் கூடுதலாக கண்காணிப்புக் கேமராக்களை நிறுவவும் முடிவு செய்துள்ளோம். விதிமீறல்களில் ஈடுபடுவோருக்கு அபராதம் விதிக்கப்படும்” என்றார்

## குழந்தைகள் நல மருத்துவமனையில் தானியங்கி மஞ்சப்பை விற்பனை இயந்திரம்




எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ள தானியங்கி மஞ்சப்பை இயந்திரத்துடன் மருத்துவமனை இயக்குநர் ரெமா சந்திரமோகன்.

**சென்னை:** உலக சுற்றுச்சூழல் தினத்தையொட்டி எழும்பூரில் உள்ள அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் தானியங்கி மஞ்சப்பை விற்பனை இயந்திரம் வைக்கப்பட்டுள்ளது.

உலக சுற்றுச்சூழல் தினம் ஆண்டுதோறும் ஜூன் 5-ம் தேதி கடைப்பிடிக்கப்படுகிறது. இதையொட்டி, எழும்பூரில் உள்ள அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் தானியங்கி மஞ்சப்பை விற்பனை இயந்திரம் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மருத்துவமனை இயக்குநர் ரெமா சந்திரமோகன் கூறியதாவது: சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிக்கும் பிளாஸ்டிக் பயன்பாட்டை அனைவரும் தவிர்க்க வேண்டும். இந்த மருத்துவமனையை பிளாஸ்டிக் பைகள் இல்லாத மருத்துவமனையாக மாற்றுவதற்காக, தமிழக சுற்றுச்சூழல் துறை உதவியுடன் தானியங்கி மஞ்சப்பை விற்பனை இயந்திரம் வைக்கப்பட்டுள்ளது.

இந்த இயந்திரத்தில் 250 பைகளை வைக்க முடியும். மருத்துவமனைக்கு வருபவர்கள் 10 ரூபாய் நாணயத்தை இயந்திரத்தில் செலுத்தினால் மஞ்சப்பை வெளியே வந்துவிடும். பொதுமக்கள் நிறைய பேர் இந்த இயந்திரத்தின் மூலம் மஞ்சப்பையை பெற்றுச் செல்கின்றனர். பருத்தி துணியால் தயாரிக்கப்பட்டுள்ள மஞ்சப்பை தரமானதாகவும், பொருட்களின் எடையைத் தாங்கும் வகையிலும் உள்ளது. அதனால், மஞ்சப்பைக்கு பொதுமக்களிடம் நல்ல வரவேற்பு உள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## உலக சுற்றுச்சூழல் தினக் கொண்டாட்டம்; தமிழ்நாடு ஈர நிலங்கள் இயக்கம் தொடக்கம்: அமைச்சர் மதிவேந்தன் தொடங்கிவைத்தார்



உலக சுற்றுச்சூழல் வாரத்தை முன்னிட்டு, வண்டலூர் அண்ணா உயிரியல் பூங்கா வளாகத்தில் உள்ள ஒட்டேரி ஏரி சீரமைப்பு பணிகளை வனத் துறைஅமைச்சர் மதியழகன், சிறு குறு மற்றும் தொழில் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேற்று தொடங்கி வைத்தனர். உடன் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் ராகுல் நாட் உள்ளிட்டோர். படம்: எம்.முத்துகணேஷ்

**சென்னை:** உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு, தமிழ்நாடு ஈர நிலங்கள் இயக்கத்தை வனத் துறை அமைச்சர் மா.மதிவேந்தன் நேற்று தொடங்கிவைத்தார்.

வண்டலூர் பூங்காவில் உள்ள ஓட்டேரியில், உலக சுற்றுச்சூழல்தின விழா நேற்று நடைபெற்றது. குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் முன்னிலை வகித்தார். வனத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன், தமிழ்நாடு ஈர நிலங்கள் இயக்கத்தை தொடங்கிவைத்து, அதுகுறித்த தகவல் கையேட்டை வெளியிட்டார்.

ஓட்டேரி ஏரியில் சுற்றுச்சூழல்சீரமைப்புப் பணிகளையும் தொடங்கிவைத்து அவர் பேசும்போது, ``தமிழகத்தில் 100 ஈர நிலங்கள் அடையாளம் காணப்பட்டு, அவற்றில் சுற்றுச்சூழல் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள ரூ.115 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது'' என்றார்.

**முதல்வரின் ட்விட்டர் பதிவு:** நிகழ்ச்சியில், சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறைச் செயலர் சுப்ரியா சாஹு, வனத் துறைத் தலைவர் சுப்ரத் மஹாபத்ர, தலைமை வன உயிரினக் காப்பாளர் சீனிவாஸ் ரெட்டி, உறுப்பினர்-செயலர் தீபக் ஸ்ரீவஸ்தவா, செங்கல்பட்டு எம்எல்ஏ ம.வரலட்சுமி, செங்கல்பட்டு மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் செம்பருத்தி துர்கேஷ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

முதல்வர் ஸ்டாலின் தனது ட்விட்டர் பதிவில், ``இந்த ஆண்டுக்கான உலக சுற்றுச்சூழல் நாள் மையக்கருவாக `பிளாஸ்டிக் மாசுபாட்டை வெல்லுங்கள்' என அறிவிக்கப்பட்டிருக்கிறது. அளவற்ற, தேவையற்ற பிளாஸ்டிக் பயன்பாட்டை எதிர்த்து நாம் தொடங்கிய `மீண்டும் மஞ்சப்பை' இயக்கத்தில் மக்கள் அக்கறையுடன் பங்கேற்கவேண்டும். மக்கா தன்மையுடைய பிளாஸ்டிக் கழிவுகளை முறையாகப் பிரித்து வழங்க வேண்டும்'' என்று தெரிவித்துள்ளார்.

அமைச்சர் உதயநிதி முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ரெஃபெக்ஸ் குழுமம் சார்பில் வழங்கப்பட்ட 10 ஆயிரம் மரக்கன்றுகளை, மாநகராட்சி மேயர் ஆர்.பிரியாவிடம், அமைச்சர் உதயநிதி வழங்கினார். தொடர்ந்து, முகாம் அலுவலக வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டார். இந்த நிகழ்ச்சியில், துணை மேயர் மு.மகேஷ்குமார், மாநகராட்சி ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன், ரெஃபெக்ஸ் குழும இயக்குநர் அனில் ஜெயின் ஆகியோர் பங்கேற்றனர்.

தொடர்ந்து, ரிப்பன் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பிளாஸ்டிக் பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வுப் பிரச்சாரப் பயணத்தை மேயர் பிரியா தொடங்கி வைத்தார்.



EVA STALIN IAS ACADEMY

**மாபெரும் அறம் செய்வோம்:** பாமக தலைவர் மருத்துவர் அன்புமணி வெளியிட்டுள்ள உலகச் சுற்றுசூழல் நாள் வாழ்த்து செய்தியில், ``உலகின் எல்லாக் கேடுகளுக்கும் காரணமான நெகிழிக் கழிவுகளுக்கு முடிவுகட்ட உறுதியேற்போம்'' எனத் தெரிவித்துள்ளார்.

இதேபோல, பாமக நிறுவனர் ராமதாஸ் வெளியிட்டுள்ள செய்தியில், ``மரம் வளர்ப்போம், சுற்றுச்சூழலைக் காக்கும் மாபெரும் அறம்செய்வோம்'' எனக் குறிப்பிட்டுள்ளார். மதிமுக முதன்மைச் செயலாளர் துரை வைகோ, ``நமது புவியை அடுத்த தலைமுறை வாழ ஆரோக்கியமானதாக மாற்ற சுற்றுச்சூழலைப் பாதுகாப்போம்'' எனத் தெரிவித்துள்ளார்.

ஈஷா அமைப்பின் காவிரி கூக்குரல் இயக்கம் சார்பில், சென்னை அடையாறில் உள்ள ரெயின் ட்ரீ ஹோட்டல் வளாகத்தில் மரக் கன்றுகள் நடப்பட்டன.

**இந்தியாவின் சேவைத் துறையில் 13 ஆண்டுகளில் 2-வது வலுவான வளர்ச்சி**



**புதுடெல்லி:** இந்தியாவின் சேவைத் துறை வளர்ச்சி 13 ஆண்டுகளில் இரண்டாவது வலுவான வளர்ச்சியை பதிவு செய்துள்ளது. இதற்கு, தேவையில் ஏற்பட்ட சாதகமான நிலை மற்றும் புதிய வாடிக்கையாளர்களை ஈர்த்தது முக்கிய காரணங்களாக அமைந்தன.

எஸ்&பி குளோபல் இந்தியா சர்வீசஸ் மதிப்பீட்டின்படி பிஎம்ஐ பிசினஸ் ஆக்டிவிட்டி குறியீடு ஏப்ரல் மாதத்தில் 62 ஆக இருந்த நிலையில், மே மாதத்தில் 61.2 ஆக குறைந்தது. இந்திய சேவை துறையின் வளர்ச்சி ஏப்ரல் மாதத்துடன் ஒப்பிடும்போது மே மாதத்தில் குறைந்திருந்தாலும் 2010 ஜூலை

மாதத்துக்குப் பிறகு இரண்டாவது அதிகபட்ச வளர்ச்சி இதுவாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து 22-வது மாதமாக சேவை துறை குறியீடு 50-க்கும் மேல் உள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த குறியீடு 50-க்கு கீழ் இருந்தால் பின்னடைவாகவும், அதிகமாக இருந்தால் முன்னேற்றமாகவும் பொருள் கொள்ளப்படுகிறது.

சேவை துறை மே மாதத்தில் மீள்தன்மை உடையதாக மாறியுள்ளது. புதிய பணிகளை நிறைவேற்றுவதற்கு தேவையான பணியாளர்களை சேவை துறை கணிசமாக அதிகரித்துக் கொண்டுள்ளது. மேலும், வரவிருக்கும் 12 மாதங்களில் இந்த துறையின் வணிக செயல்பாடு விறுவிறுப்பாக இருக்கும் என்று எஸ்&பி குளோபல் மார்க்கெட் இன்டலிஜென்ஸின் பொருளாதார இணை இயக்குநர் பொலியானா டி லிமா தெரிவித்துள்ளார்.

**சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வாழ்க்கை முறை வேண்டும்: பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு**

**புதுடெல்லி:** சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வாழ்க்கை முறைக்கு மாற வேண்டும் என்று பிரதமர் மோடி அழைப்புவிடுத்துள்ளார். உலக சுற்றுச்சூழல் தினம் நேற்று கொண்டாடப்பட்டது. இதையொட்டி பிரதமர் மோடி காணொலி வாயிலாக பேசியதாவது:

ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்கை ஒழிப்பதற்கான பிரச்சாரத்தை முன்னெடுத்துச் செல்வதே இந்த ஆண்டு சுற்றுச்சூழல் தினத்தின் கருப்பொருள் ஆகும். கடந்த 2018-ம் ஆண்டிலேயே இந்தியாவில் ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்கை ஒழிக்கும் திட்டப் பணிகள் தொடங்கப்பட்டன. இதன்படி ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை விதிக்கப்பட்டு உள்ளது. பிளாஸ்டிக் கழிவுகளை மறுசுழற்சி செய்வது கட்டாயமாக்கப்பட்டு இருக்கிறது. இதன் காரணமாக, இந்தியாவில் சுமார் 30 லட்சம்டன் பிளாஸ்டிக் கழிவுகள் மறுசுழற்சி செய்யப்பட்டுள்ளன. இது இந்தியாவில் உற்பத்தியாகும் மொத்த பிளாஸ்டிக் கழிவுகளில் 75 சதவீதம் ஆகும்.

பருவநிலை மாற்றத்தைத் தடுப்பது, சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது தொடர்பான தெளிவான தொலைநோக்கு கொள்கையுடன் இந்தியா முன்னேறி வருகிறது. கடந்த 9 ஆண்டுகளில் பசுமை எரிசக்தி உற்பத்தியில் தீவிர கவனம் செலுத்தப்படுகிறது.

குறிப்பாக சூரிய மின் உற்பத்திக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. எல்.இ.டி பல்புகளை பயன்படுத்த ஊக்கம் அளிக்கப்படுகிறது. இதன் மூலம் மக்களின் பணம் சேமிக்கப்படுகிறது. அதோடுநாட்டின் சுற்றுச்சூழலும் பாதுகாக்கப்படுகிறது. சுற்றுச்சூழலைப் பாதுகாக்க இந்தியாவில் பசுமை ஹைட்ரஜன் திட்டம் தொடங்கப்பட்டு இருக்கிறது. விவசாயிகள் இயற்கை விவசாயத்துக்கு மாற ஊக்கம் அளிக்கப்படுகிறது.

இதன்மூலம் ரசாயன உரங்கள் தவிர்க்கப்பட்டு மண் வளமும் தண்ணீர் வளமும் மேம்பட்டு வருகிறது. கடந்த 9 ஆண்டுகளில் மட்டும் இந்தியாவில் வேளாண் நிலங்கள் மற்றும் உயிரியல் பூங்காக்களின் பரப்பளவு 3 மடங்கு அதிகரித்திருக்கிறது.

நாட்டின் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க பசுமை எதிர்காலம், பசுமை பொருளாதாரம் ஆகிய விழிப்புணர்வு பிரச்சாரங்களை இன்று தொடங்கி உள்ளோம். நாடு முழுவதும் அமைந்துள்ள உயிரியல் பூங்காக்களை பாதுகாக்க 'அம்ரித் தரோஹர் யோஜ்னா' திட்டமும் இன்று தொடங்கப்பட்டு உள்ளது. அலையாத்தி காடுகளைப் பாதுகாக்க ‘மிஷ்டி யோஜ்னா' திட்டம் தொடங்கப்பட்டு உள்ளது.

உலகின் 5-வது பெரிய பொருளாதாரமாக இந்தியா உருவெடுத்திருக்கிறது. அதே நேரத்தில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் முதல் 5 நாடுகளின் பட்டியலில் இந்தியா இணைந்திருக்கிறது. வேளாண் விளைபொருட்களின் ஏற்றுமதி தொடர்ந்து அதிகரித்து வருகிறது. பெட்ரோலில் 20% எத்தனாலை கலக்கும் திட்டம்வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு இல்லாமல் இயற்கையோடு இணைந்து வாழ்வது இந்தியாவில் மிகப்பெரிய இயக்கமாக உருவெடுத்து வருகிறது.

இதை முன்னிறுத்தி கடந்த ஆண்டு குஜராத்தின் கேவாடியா, ஏக்தா நகரில் ‘மிஷன் லைப்' இயக்கம் தொடங்கப்பட்டது. இந்த இயக்கத்தில் ஒரு மாதத்தில் மட்டும் 2 கோடி மக்கள் இணைந்தனர். சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் பொருட்களின் பயன்பாட்டை குறைப்பது, மறுபயன்பாடு, மறுசுழற்சி ஆகிய கொள்கைகளை லட்சக்கணக்கான மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வாழ்க்கைமுறைக்கு நாம் மாறினால் நாடு மாறும், ஒட்டுமொத்த உலகமும் மாறும். இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

**எல்லையில் ராணுவ கட்டமைப்புகளை அதிகரிக்கும் சீனா - சர்வதேச அமைப்பு எச்சரிக்கை**



சீனாவின் அக்சாய் சின் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் ஹெலிகாப்டர் தளம்.

**புதுடெல்லி**: லடாக் எல்லைப் பகுதிகளில் சீன அரசு புதிதாக ராணுவ கட்டமைப்புகளை ஏற்படுத்தி வருகிறது என்று சர்வதேச அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

லடாக் எல்லைப் பகுதிகளில் சீன ராணுவம் அடிக்கடி அத்துமீறல்களில் ஈடுபட்டு வருகிறது. கடந்த 2020-ம் ஆண்டில் லடாக்கின் கல்வான் பள்ளத்தாக்கில் இந்திய, சீன வீரர்களிடையே மிகப்பெரிய மோதல் ஏற்பட்டது. அதன்பிறகு இன்றளவும் லடாக்கில் பதற்றமான சூழ்நிலை நிலவுகிறது.

லடாக் எல்லையை ஒட்டிய சீனப் பகுதிகளில் அந்த நாட்டு ராணுவம் உள்கட்டமைப்புகளை மேம்படுத்தி வருவதாக தகவல்கள் வெளியாகி வருகின்றன. இதற்கு பதிலடியாக லடாக் எல்லையில் புதிய விமான தளம், புதிய சாலைகள், பாலங்களை மத்திய அரசு அமைத்து வருகிறது.

இந்த சூழலில் இங்கிலாந்தை சேர்ந்த 'சாடம் ஹவுஸ்' என்ற ஆய்வு அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: லடாக்கை ஒட்டியுள்ள அக்சாய் சின் பகுதி சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ளது. இது லடாக்கின் ஒருங்கிணைந்த பகுதி என்று இந்தியா உரிமை கோருகிறது. லடாக் மற்றும் அக்சாய் சின் பகுதியில் கல்வான் பள்ளத்தாக்கு அமைந்துள்ளது. கடந்த 2020-ம் ஆண்டு ஜூனில் அங்கு இந்திய, சீன வீரர்களிடையே மிகப்பெரிய மோதல் ஏற்பட்டது.

இந்த சூழலில் அக்சாய் சின் மற்றும் சீனாவின் ஜின்ஜியாங் பகுதியை இணைக்கும் வகையில் ஜி695 என்ற பெயரில் சீன அரசு நெடுஞ்சாலையை அமைத்து வருகிறது. இந்த சாலை பான்காங் ஏரி வரை நீளும். இதன்மூலம் சீன ராணுவத்துக்கு தேவையான ஆயுதங்கள், தளவாடங்களை எளிதாக கொண்டு செல்ல முடியும்.

கடந்த 6 மாதங்களில் எடுக்கப்பட்ட செயற்கைக்கோள் புகைப்படங்களை ஆய்வு செய்தபோது அக்சாய் சின் பகுதியில் சீன ராணுவம் சார்பில் புதிதாக முகாம்கள் அமைக்கப்பட்டிருப்பது உறுதியாகிறது. புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டு உள்ளன. புதிதாக சாலைகள் அமைக்கப்பட்டு உள்ளன.

அக்சாய் சின் பகுதியில் உள்ள ஏரியில் புதிதாக ஹெலிகாப்டர் தளம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த தளத்தில் ஹெலிகாப்டர்கள் மற்றும் ட்ரோன்களை நிறுத்தி வைக்க வசதிகள் செய்யப்பட்டு உள்ளன.

ராகி நல்லா நதியின் பள்ளத்தாக்கு பகுதியில் சீன ராணுவம் சார்பில் எல்லைச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் அந்தப் பகுதியில் இந்திய ராணுவத்தின் ரோந்துப் பணியை தடுக்க முடியும். பான் காங் ஏரிப் பகுதியில் சீன ராணுவத்தின் பாலம் கட்டும் பணி நிறைவடைய உள்ளது. அந்த பாலம் முழுமை பெற்றால் அப்பகுதியில் சீன ராணுவத்தின் ஆதிக்கம் அதிகரிக்கும்.

செயற்கைக்கோள் புகைப்படங்களின் மூலம் அக்சாய் சின் பகுதியில் சீன ராணுவ கட்டமைப்புகள் அதிகரிக்கப்பட்டு வருவது தெளிவாகிறது. இந்தியாவுடன் மீண்டும் ஒரு மோதலுக்கு சீனா தயாராகிவருகிறதா என்ற கேள்வியும் எழுகிறது. இவ்வாறு ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பருவநிலை மாற்றத்துக்கு வளர்ந்த நாடுகள் முன்னுரிமை கொடுக்கவில்லை: பிரதமர் மோடி குற்றச்சாட்டு

**புதுடெல்லி:** பருவநிலை மாற்றத்துக்கு வளர்ந்த நாடுகள் முன்னுரிமை கொடுக்கவில்லை என்று பிரதமர் நரேந்திர மோடி குற்றம்சாட்டியுள்ளார்.

டெல்லியில் நடைபெற்ற உலக சுற்றுச்சூழல் தின நிகழ்ச்சிக்காக வீடியோ செய்தி ஒன்றை பிரதமர் மோடி அளித்துள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது: "உலகின் பருவநிலையைப் பாதுகாக்க அனைத்து நாடுகளும் சிந்திக்க வேண்டியது அவசியம். இதில், சுயநலத்திற்கு இடம் இருக்கக் கூடாது. நீண்ட காலமாகவே முன்னேறிய நாடுகளின் வளர்ச்சி முன்னுதாரணமானதாக இருக்கவில்லை. முதலில் நம் நாட்டை

EVA STALIN IAS ACADEMY

வளமாக்குவோம்; பிறகு சுற்றுச்சூழலைப் பற்றி சிந்திப்போம் என்பதே வளர்ந்த நாடுகளின் சிந்தனையாக இருந்தது. இதன் மூலம் வளர்ச்சியின் இலக்குகளை அந்த நாடுகள் அடைந்தன. ஆனால், உலகின் சுற்றுச்சூழல், அவர்களின் வளர்ச்சிக்கான விலையை செலுத்த வேண்டியிருந்தது.

இன்றும் சில வளர்ந்த நாடுகளின் தவறான கொள்கைகளுக்கான விலையை உலகின் வளரும் மற்றும் ஏழை நாடுகள் கொடுக்கின்றன

. வளர்ந்த நாடுகளின் இந்த அணுகுமுறையை பல பத்தாண்டுகளாக யாருமே எதிர்க்கவில்லை. ஆனால், இந்த அனைத்து நாடுகளிடமும் பருவநிலை நீதி குறித்த கேள்வியை இந்தியா எழுப்பி இருக்கிறது. இதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்தியா தனது வளர்ச்சிக்காக எவ்வாறு கவனம் செலுத்துகிறதோ அதேபோல சுற்றுச்சூழலிலும் அதிக கவனம் செலுத்துகிறது.

ஒருமுறை மட்டுமே பயன்படுத்தும் பிளாஸ்டிக்கை ஒழிப்பதுதான் இந்த ஆண்டின் உலக சுற்றுச்சூழல் தின கருப்பொருள். இது பற்றி இன்று உலகம் பேசுகிறது. ஆனால் கடந்த நான்கு-ஐந்து ஆண்டுகளாக இந்தியா இதனை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக்கை ஒழிக்க 2018 ஆம் ஆண்டிலேயே இந்தியா இரண்டு நிலைகளில் செயல்படத் தொடங்கியது. ஒருபுறம், ஒருமுறை மட்டும் பயன்படுத்தும் பிளாஸ்டிக்கை தடை செய்தோம்; மறுபுறம் பிளாஸ்டிக் கழிவுகளை பதப்படுத்துவதை கட்டாயமாக்கினோம். கடந்த ஒன்பது ஆண்டுகளில், இந்தியா பசுமை மற்றும் தூய்மையான எரிசக்தி மீது அதிக கவனம் செலுத்தியுள்ளது" என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

## **துப்பாக்கி சுடுதலில் தனுஷுக்கு தங்கம்**



ஐஎஸ்எஸ்எஃப் ஜூனியர் உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதலில் இந்தியாவின் தனுஷ் ஸ்ரீகாந்த் தங்கப் பதக்கம் வென்றார.

ஜெர்மனியின் சுஹ்ல் நகரில் நடைபெற்று வரும் இந்தத் தொடரில் ஆடவருக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் பிரிவில் இந்தியாவின் தனுஷ் ஸ்ரீகாந்த் தங்கப் பதக்கம் வென்றார். இறுதிப் போட்டியில் தனுஷ் ஸ்ரீகாந்த் 249.4 புள்ளிகள் குவித்து முதலிடம் பிடித்தார். சுவீடனைச் சேர்ந்த போன்டஸ் கலின் 248.1 புள்ளிகளுடன் வெள்ளிப் பதக்கம் பெற்றார். பிரான்ஸின் ரோமெய்ன் அஃப்ரேர் வெண்கலப் பதக்கம் கைப்பற்றினார்.

ஸ்கீட் கலப்பு அணிகள் பிரிவில் இந்தியாவுக்கு வெண்கலப் பதக்கம் கிடைத்தது. இந்தத் தொடரில் இந்தியா 3 தங்கம், ஒரு வெள்ளி, 2 வெண்கலத்துடன் பதக்க பட்டியலில் முதலிடத்தில் உள்ளது. 2 தங்கம், ஒரு வெள்ளியுடன் அமெரிக்கா 2-வது இடத்தில் உள்ளது.

**சிறப்பு ஒலிம்பிக் போட்டி: இந்திய வீரர்கள் 198 பேர் பங்கேற்பு**



**புதுடெல்லி:** சிறப்பு ஒலிம்பிக் போட்டி ஜெர்மனி நாட்டில் வரும் 17-ம் தேதி முதல் 24-ம் தேதி வரை நடைபெறுகிறது. இதில் 190 நாடுகளைச் சேர்ந்த 7,000-க்கும் மேற்பட்டோர் பங்கேற்கின்றனர். மொத்தம் 26 பிரிவுகளில் போட்டிகள் நடைபெற உள்ளன. இந்நிலையில் சிறப்பு ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவில் இருந்து 255 பேர் கொண்ட குழு பங்கேற்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் 198 வீரர், வீராங்கனைகள் மற்றும் 57 பயிற்சியாளர்கள் இடம் பெற்றுள்ளனர். 16 பிரிவுகளில் நடைபெறும் போட்டிகளில் இந்திய வீரர், வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

வரும் 12-ம் தேதி இந்திய குழு ஜெர்மனி புறப்பட்டுச் செல்கிறது. முன்னதாக டெல்லியில் உள்ள ஜவஹர்லால் நேரு மைதானத்தில் நாளை முதல் வரும் 11-ம் தேதி வரை நடைபெறும் பயிற்சி முகாமில் வீரர்கள் கலந்துகொள்கின்றனர்.

சிறப்பு ஒலிம்பிக் என்பது அறிவுசார் குறைபாடுகள் உள்ளவர்களுக்கான உலகின் மிகப்பெரிய விளையாட்டு நிகழ்வாகும். சிறப்பு ஒலிம்பிக்கில் தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கம் வெல்லும் இந்திய வீரர்களுக்கு முறையே ரூ.5 லட்சம், ரூ.3 லட்சம், ரூ.2 லட்சம் ஊக்கத் தொகை வழங்கப்படும் என மத்திய விளையாட்டுத்துறை அமைச்சகம் ஏற்கெனவே அறிவித்துள்ளது.

## ஆசிய தடகளம் இந்தியாவுக்கு 3-வது தங்கம்



**மும்பை:** யு-20 ஆசிய தடகள சாம்பியன்ஷிப் தென் கொரியாவின் யெச்சியோன் நகரில் நடைபெற்று வருகிறது. இதில் ஆடவருக்கான குண்டு எறிதலில் இந்தியாவின் சித்தார்த் சவுத்ரி 19.52 மீட்டர் தூரம் எறிந்து தங்கப் பதக்கம் வென்றார். இந்தத் தொடரில் இந்தியா கைப்பற்றியுள்ள 3-வது தங்கப் பதக்கம் இதுவாகும். தொடரின் முதல் நாளில் 400 மீட்டர் ஓட்டத்தில் ஹீனா மல்லிக், வட்டு எறிதலில் பரத்பிரீத் சிங் தங்கம் வென்றிருந்தனர்.

ஆடவருக்கான ஈட்டி எறிதலில் இந்தியாவின் ஷிவம் லோஹகரே 72.34 மீட்டர் தூரம் எறிந்து வெள்ளிப் பதக்கம் வென்றார். மகளிருக்கான நீளம் தாண்டுதலில் இந்தியாவின் சுஷ்மிதா 5.96 மீட்டர் தூரம் தாண்டி வெள்ளிப் பதக்கம் வென்றார்.

ஆடவருக்கான 3000 மீட்டர் ஸ்டீபிள்சேஸில் இந்தியாவின் ஷாருக் கான் இலக்கை 8:51.74 வினாடிகளில் கடந்து வெள்ளிப் பதக்கம் வென்றார்.

ஆடவருக்கான 800 மீட்டர் ஓட்டத்தில் ஷகீல் பந்தய தூரத்தை 1:49.79 விநாடிகளில் கடந்து வெண்கலப் பதக்கம் கைப்பற்றினார். அதேவேளையில் 4x400 மீட்டர் தொடர் ஓட்டத்தில் இந்திய அணி பந்தய தூரத்தை 3:30.12 விநாடிகளில் கடந்து வெண்கலப் பதக்கம் பெற்றது.

EVA STALIN IAS ACADEMY